1983 சனவரி 27]

சாத்தூர் தாலூக்காவில் விதை கொள்முதல் செய்யும் திட்டம்.

*வினா எண். 8 திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதைக் கொள்முதல் அதிகாரிகள் இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் தாலுகாவில் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யாமல் வியாபாரிகளிடம் வாங்குகிறார்கள் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்ய சீரான திட்டம் வகுக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:—

(அ) மற்றும் (ஆ) : பருத்தி விதைகள் மட்டும், நியமனம் செய்யப்பட்ட வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்படு கின்றது. மற்ற விதைகளை விவசாயிகளிடமிருந்து நேரிடை யாகவே கொள்முதல் செய்யப்படுகிறது.

பருத்தி விவசாயம் செய்யும் விவசாயிகள் தங்கள் வசம் இருக்கும் பருத்தியை அரைத்து விதைகளை மட்டும் விவசாயத் துறைக்கு கொள்முதலுக்கு வழங்க முன்வருவதில்லை. எனவே நியமனம் செய்யப்பட்ட வியாபாரிகள் மூலம் பருத்தியை அரைத்து விதையை மட்டும் அவர்களிடமிருந்து துறை வாங்குகிறது.

(முற்பகல் 9.40)

திரு. சோ. அழகர்சாமி: கடந்த ஆண்டு இந்த மாதிரி விவசாயி களால் புகார் அந்த வட்டாரத்திலே கூறப்பட்டிருக்கிறது. பருத்தி விதைமட்டுமல்ல, வேறு விதைகளும் அப்படித்தான். ஆகவே கூடுமானவரையில் விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளை அரசாங்கப் பண்ணையில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அது போதாமல் வாங்கவேண்டு மானால் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டுமென்ற உத்திரவை அமைச்சர் அவர்கள் பிறப்பிப்பார் களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இருக்கிற விதிமுறைகள் அப்படித்தான். பருத்தியைத்தவிர, மற்ற விதைகளை நேரடி யாக வாங்வேண்டும் என்பதுதான். ஆகவே அந்த விதியை நிச்சயமாக அரசு அமல்படுத்தும்.

தஞ்சை மாவட்டத்தில் கோடைக்காலத்தில் பருத்தி பயிரிடும் திட்டம்.

*வினா எண் 9 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரிடும் நிலங்களில் கோடை காலத்தில் பருத்தி பயிரிடும் திட்டம் அரசு பரிசீலனை யில் உள்ளதா?